# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனியிலுள்ள ஹேம்பர்க் நகரின் பள்ளிவாயிலில்
## 07.12.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் சிறிது காலமாக அவ்வப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் அறிவிப்புகளை எடுத்துக்கூற ஆரம்பித்துள்ளேன். முதலில் ஒட்டுமொத்தமாக அறிவிப்புகளை எடுத்துக் கூறி வந்தேன். பிறகு பல்வேறு தலைப்புகளின் கீழ் இதை எடுத்துரைக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. எனவே, கடந்த பல மாதங்களாக இன்னும் சொல்வதென்றால் பல வருடங்களாக இந்தத் தொடர் நீடிக்கின்றது.

இன்றும் நான் இதே தொடரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் கனவுகள் மற்றும் ஆன்மீக கஷ்ஃப் காட்சிகள் பற்றி எடுத்துக் கூறுவேன். இது உண்மையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையை நிரூபிப்பதற்காக இருக்கின்றது அல்லது ஈமானையும், நிச்சய உறுதியையும் வளர்க்கக் கூடியவையாக அவை உள்ளன. நம்மிடத்திலும் அந்த ஈமானும், நிச்சய உறுதியும் உருவாக வேண்டும் என்பதே இவற்றை எடுத்துக் கூறுவதன் நோக்கமும் ஆகும். நமக்கும் அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பு ஏற்பட வேண்டும். அல்லாஹ்வுடன் எத்தகைய உறவை உருவாக்குவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வந்தார்களோ அப்படிப்பட்ட உண்மையான தொடர்பை நாம் அல்லாஹ்வுடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பல்வேறு வகையான அறிவிப்புகள் கூறப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் இந்த அறிவிப்புகள் கூறப்பட்டுள்ளன. எனவே, அவை மீண்டும் கூறப்படக்கூடாது என்றே பொதுவாக நான் முயற்சி செய்து வருகின்றேன். இதற்காக செக்கிங் செய்யப்படுகிறது. எவ்வாறிருப்பினும், ஒருவேளை சில அறிவிப்புகள் மீண்டும் கூறப்படலாம்.

**முதல் அறிவிப்பு ஹஸ்ரத் சர்தார் கரம் தாத் கான் சாஹிப் (ரலி) அவர்களுடையதாகும்.** இவர்கள் 1902 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். அதே வருடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் சந்தித்தார்கள்.

கூறுகின்றார்கள்: நான் பைஅத் செய்வதற்கு முன்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் கனவில் பார்த்தேன். ஒரு ரோட்டில் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் உலாவிக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு முன்னால் வந்தேன். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்து தனது விரல்களால் சுட்டிக் காட்டியவாறு, “இவர் இறைவனிடமிருந்து வந்தவர், இவர் இறைவனிடமிருந்து வந்தவர்” என்று மூன்று முறை ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

கூறுகின்றார்கள்: 1902 ஆம் ஆண்டு நான் காதியான் தாருல் அமானில் வைத்து அங்கு சிறிய பள்ளிவாயில் அதாவது மஸ்ஜிது முபாரக்கில் வைத்து நான் பைஅத் செய்த போது கனவில் கண்ட அதே வடிவத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்தேன்.

**பிறகு ஹஸ்ரத் கரீமுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

இவர்கள் 1896 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்கள். அதே வருடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திக்கும் நற்பாக்கியம் இவருக்கு கிடைத்தது.

கூறுகின்றார்கள்: 1896 ஆம் ஆண்டு ஏறக்குறைய பாதி கழிந்திருந்த நிலையில் அதாவது அந்த ஆண்டில் மே அல்லது ஜுன் மாதத்தில் கனவில் இவர், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஒட்டகத்தில் சவாரி செய்து கொண்டிருக்கும் நிலையில் சந்தித்தார்கள். கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒட்டகத்தில் சவாரி செய்து வருவதைப் பார்த்தார்கள்.

கூறுகின்றார்கள்: இந்த அடியான் தனியாக இருந்த தருணத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புதிதாக உழப்பட்டிருந்த ஒரு வயலைக் கடந்து சென்ற சமயத்தில் அவர்களை நான் சந்தித்தேன்.

அங்கு பெரும் பெரும் மண் குவியல்கள் இருந்தன. ஹுஸுர் (அலை) அவர்கள் என் பக்கம் வந்து கொண்டிருந்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியுடனும், அன்புடனும் என்னை முஸாபா செய்தார்கள். இந்த நிலைமையில் இந்த அடியான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். கனவிலேயே இதற்கு முன்னர் நக்ஷ்பந்த் பிரிவைச் சேர்ந்த ஒரு பீருடன் எனக்கு சந்திப்பு நிகழ்ந்திருந்தது. நான் முஸாபா செய்வதற்காக அவரிடம் எனது கையை நீட்டினேன். அந்த பீர் எனது கையைத் தட்டியவாறு மார்க்கமற்றவனே! சென்று விடு! என்று கூறினார். ஆனால், ஸலாம் கூற வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும். எவ்வாறிருப்பினும், அவர் என்னை மார்க்கமற்றவன் என்று கூறி எனக்கு ஸலாம் கூறவில்லை.

கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு ஹுஸுர் (அலை) அவர்களுடன் எனக்கு சந்திப்பு ஏற்பட்டது. ஹுஸுர் மிகுந்த மகிழ்ச்சியுடன் என்னை சந்தித்தார்கள்.

**ஹஸ்ரத் கரீமுத்தீன் சாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒரு கனவில் நான் பார்த்தேன். போலீஸ் ஆக இருந்த சவுத்ரி நபி பக்ஷ் சாஹிப் அவர்களுக்கு ஹுஸுர் (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதற்கான நற்பாக்கியம் ஏற்கனவே கிடைத்திருந்தது. கனவில் இந்த போலீஸிற்கு இல்ஹாம் வருகின்றது என்று இவருக்கு கூறப்பட்டது.

இன்றைய நாட்களில் பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் உள்ள போலீஸ் போன்றவர்களல்ல இவர்கள். இவர்களுக்கு லஞ்சம் வாங்குவதையும், அநீதியான செயல்களைச் செய்வதையும் தவிர வேறு எதுவும் தெரியாது. இவர்கள் அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களாவர். அவர்களுக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு இருந்தது.

கூறுகின்றார்கள்: நான் கனவில் இவருக்கு இல்ஹாம் இறங்குவதைப் பார்த்தேன். நான் இந்தக் கனவை எனது நண்பரான ஸெய்யது முஹம்மது சா சாஹிப் அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர், “வீணாக தலைவலி உண்டாக்காதீர்” என்று கூறினார். ஆனால், நான் சுபுஹ் நேரத்தில் பள்ளிவாயிலில் தொழுது விட்டு திரும்பி வந்த போது சூரியன் உதயமாகி இருந்தது. அப்போது மர்ஹூம் ஸெய்யது முஹம்மது அலி சா சாஹிப் அவர்களும், சவுத்ரி நபி பக்ஷ் சாஹிப் அவர்களும் சேர்ந்து சவுத்ரி சாஹிப் அவர்கள் இரவில் எழுதியிருந்த சில சொற்கள் வரிசை மாறி இருந்ததால் அவற்றை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். ஸெய்யது முஹம்மது அலி சா சாஹிப் அவர்கள் இவரிடம், “வீணாக எனக்கு தலைவலி உண்டாக்காதீர்” என்றே கூறியிருந்தார்கள். அதாவது சவுத்ரி சாஹிபிற்கு எந்த இல்ஹாமும் வரவில்லை என்றே கூறியிருந்தார். ஆனால் நான் தொழுது விட்டு திரும்பி வந்த போது சவுத்ரி நபி பக்ஷ் சாஹிப் அவர்களும் அமர்ந்திருந்தார்கள். இவர்களுக்கிடையில் பரஸ்பரம் தொடர்பு இருந்தது. இவர்கள் சில தாள்களை வரிசைப்படி வைத்துக் கொண்டிருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: இதனால் இவை இரவில் வந்த இல்ஹாம்களாக அல்லது வேறு எந்த நேரத்திலாவது வந்த இல்ஹாம்களாக இருக்கலாம். அவற்றையே அவர்கள் வரிசைப்படுத்தி வைக்கின்றார்கள் என்ற சந்தேகம் எனக்கு எழுந்தது. “தலைவலி உண்டாக்காதீர்” என்று முதலில் நீங்கள் கூறியிருந்தீர்கள். இப்போது இது என்ன விசயம்? என்று கூறுங்கள் என்று நான் அவர்களிடம் கேட்டேன். இதைக் கேட்ட அவர்கள், மக்கள் எள்ளிநகையாடி பரிகாசம் செய்வதால் நாங்கள் இதுபற்றி வெளிப்படையாகக் கூறவில்லை என்று கூறினார்கள்.

கூறுகின்றார்கள்: அந்த சமயத்திலிருந்தே ஹுஸுர் (அலை) அவர்களது முரீதுகளுக்கு இல்ஹாம் வருகின்றது. எனவே, கண்டிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உண்மையாளர் ஆவார்கள் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அப்போது எனக்கு 16 அல்லது 17 வயது தான் இருக்கும். நான் ஹுஸுர் அவர்களின் எந்த நூலையும் படித்ததில்லை. அவ்வாறே ஆராய்ச்சி செய்யும் இயல்பும் என்னிடம் இருக்கவில்லை. நான் சிறுவனாக இருந்தேன். எந்த மார்க்கக் கல்வியும் எனக்கு கிடைக்கவில்லை. திருக்குர்ஆன் பொருளுடன் அல்லாமல் பார்த்து ஓத மட்டும் நான் படித்திருந்தேன். அப்போது எனது உலகக் கல்வியும் சாதாரண தேர்ச்சியாக இருந்தது. அதாவது எட்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தேன் என்றே இவர்கள் கூறுகின்றார்கள் என்று நினைக்கின்றேன். நான் கிலா குபா சிங் என்ற பள்ளிக்கூடத்தில் துணை ஆசிரியராகப் பணியாற்றி வந்தேன்.

பிறகு கனவில் நான் பார்த்தேன் : செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் நான் மரணித்து விடுவேன் என்று கனவில் பார்த்தேன். பிறகு நான் அதற்காக காத்துக் கொண்டிருந்தேன். இப்போது எனது மரணத்தின் சமயம் அருகில் வந்து விட்டது என நினைத்தேன். நிச்சயமாக நான் இந்த காத்தக் மாதத்தில் – அது ஒரு பஞ்சாபி மாதம் – அதில் மரணித்து விடுவேன் என்று கருதினேன். ஏனென்றால், இதற்கு முன்பு நான் கண்ட கனவுகள் நிறைவேறி இருந்தன. எனவே, இந்தக் கனவும் நிறைவேறும் என்ற உறுதி எனக்கு இருந்தது. அதிகபட்சம் செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதம் வரை தான் எனது வாழ்நாள் நீடிக்கும் என்று நான் நினைத்தேன்.

கூறுகின்றார்கள்: இந்த மாதமும் கழிந்து விட்டது. நான் முஹம்மது அலி சா சாஹிபிடம், நீங்கள் நூல்களைப் படித்துள்ளீர்கள். உங்களுக்கு இதுபற்றி திருப்தி ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறினேன். சவுத்ரி முஹம்மது அலி சா சாஹிபிற்கு சவுத்ரி நபி பக்ஷ் சாஹிபுடன் தொடர்பிருந்தது. அவர்களுக்கு வரும் இல்ஹாம்கள் பற்றியும் அவருக்குத் தெரிந்திருந்தது. அவர் அந்த சமயம் வரை பைஅத் செய்யாமல் இருந்தாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக அவர் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியிருந்தார். அன்னாரது நூல்களைப் படித்து வந்தார். நான் அவர்களிடம், நீங்கள் நூல்களைப் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களுக்கு இதுபற்றி திருப்தி ஏற்பட்டுள்ளதா? இல்லையா? என்பது எனக்கு தெரியாது. ஆனால், நான் உங்களை விட முன்னதாகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து விடுவேன் என்று கூறினேன்.

கூறுகின்றார்கள்: அதற்குப் பிறகு நான் அங்கிருந்து நடந்தே காதியான் வந்து சேர்ந்தேன். நான் இங்கு வந்ததும் பல நாட்களாக இங்குமங்கும் திரிந்து கொண்டேயிருந்தேன். ஒருநாள் நான் பேராவைச் சேர்ந்த ஹகீம் ஃபஸ்லுத்தீன் சாஹிப் அவர்களிடம், நான் ஹுஸுரிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று கூறினேன். ஹகீம் சாஹிப், இந்த சிறுவன் வீணே இங்குமங்கும் திரிகின்றான் என்று நினைத்தேன் என்று கூறினார்கள். பிறகு மர்ஹூம் ஹகீம் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நான் பைஅத் செய்ய விரும்புவதைத் தெரிவித்தார்கள். அதை ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பிறகு தனது கையில் எனது கையைப் பிடித்தவாறு தனிமையில் நான் மட்டும் அவர்களிடம் பைஅத் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கினார்கள். நான் கனவுகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எவ்வாறு பார்த்திருந்தேனோ அவ்வாறே இங்கு வந்து அவர்களை நேரிலும் பார்த்தேன். என் மீது மேலான இறைவனது மகத்தான அன்பு இருந்திருக்கின்றது. அவ்வாறில்லையென்றால் எனது நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பது எனக்கு தெரியாது. ஸமீமா அஞ்சாமே ஆத்தமில் வெளியிடப்பட்ட பத்ர் சஹாபாக்களின் பட்டியலில் 78வது பெயராகவோ 79வது பெயராகவோ எனது பெயர் இடம்பெற்றிருக்காது. ஸமீமா அஞ்சாமே ஆத்தமில் வெளியிடப்பட்ட பட்டியலில் 79வது பெயராக இவர்களது பெயர் எழுதப்பட்டுள்ளது.

**பிறகு மியான் அல்லாஹ் தத்தா சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

இவர்கள் 1900 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். 1905 ஆம் ஆண்டு இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள்.

கூறுகின்றார்கள்: நான் ஹோஸ்யாபூர் மாவட்டத்திலுள்ள மெஹல்பூரில் வசித்து வருபவனாவேன். எப்போது சூரியனுக்கு சந்திரனுக்கும் கிரகணம் ஏற்பட்டதோ அப்போது எனக்கு ஏறக்குறைய 10 அல்லது 12 வயது இருக்கும். அப்போது நான் எனது ஆசிரியருடன் இணைந்து திருக்குர்ஆன் ஓதி வந்தேன். நஃபில் தொழுகைகளை தொழுது வந்தேன். 1897 ஆம் ஆண்டில் அல்லது 1898 ஆம் ஆண்டில் எங்களது கிராமத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றிய செய்தி வந்து சேர்ந்தது. குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த காதியானில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்துள்ளார்கள் என்ற செய்தி சேக் ஸஹாபுத்தீன் சாஹிப் அவர்கள் மூலமாக கிடைத்தது. இரண்டு மூன்று வருடங்களாக அங்கு கருத்துப் பரிமாற்றம் நடந்து வந்தது. 1900 ஆம் ஆண்டில் இந்த எளியவன் கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் காதியானில் பார்த்தேன். நான் காதியான் வரவில்லை என்றாலும், அந்தக் கனவின் மூலமாக எனக்கு திருப்தி ஏற்பட்டது. இதற்கு முன்னர் ஒருபோதும் அவர் காதியானைப் பார்த்ததில்லை. கனவின் மூலமாக திருப்தி ஏற்பட்டது.

எவ்வளவு விரைவாக முடியுமோ பைஅத் செய்து விட வேண்டும் என்று எண்ணினேன். நான் ஒரு பைசா கொடுத்து கார்டு வாங்கி காஸி ஸஹாபுத்தீன் சாஹிப் அவர்களிடம் சென்றேன். அவர்களிடம் நான், மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை (கனவில்) சந்தித்து விட்டேன். அது தொடர்பாக எனக்கு திருப்தி ஏற்பட்டது. எனவே

பைஅத்திற்கான எனது கடிதத்தை எழுதுங்கள். என்னுடைய கைநாட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர்கள் கொஞ்சம் காத்திருங்கள். சில நாட்களுக்குப் பிறகு பைஅத் செய்தவர்களின் பட்டியலை அனுப்புவோம் என்று கூறினார்கள்.

கூறுகின்றார்கள்: பைஅத் செய்த 40 பேர்களின் பட்டியல் தயார் செய்து அனுப்பப்பட்டது. அதில் எனது பெயரும் இருந்தது.

**ஹஸ்ரத் தீன் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

இவர்கள் 1902 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்கள். 1904 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்தார்கள்.

கூறுகின்றார்கள்: நான் 1902 ஆம் ஆண்டில் வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சலின் காரணமாக மிகவும் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தேன். அந்த நாட்களில் எனது தந்தையார் கூலி வேலை செய்வதற்காக கல்கத்தா சென்றிருந்தார்கள். நான் கனவில் காதியான் வந்திருந்தேன். முதலில் நான் காதியான் பற்றி எண்ணிக்கூடப் பார்த்ததேயில்லை. என்ன பார்த்தேன் என்றால், அங்கு ஒரு சிறிய அறை இருந்தது. கீழே விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. நாலாபுறமும் மாடக்குழி இருந்தது. அதாவது சுவர்களில் பொருள் வைப்பதற்கான ஒரு சிறிய இடம் இருந்தது. அந்த ஒவ்வொரு மாடக்குழியிலும் ஒரு மைக்கூடு இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அங்கு உலாவிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். எந்த மைக்கூட்டின் பக்கம் சென்றாலும் அங்கிருந்தே பேனாவை நிரப்பிக் கொண்டார்கள். நான் கதவருகில் சென்று, அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுகின்றேன். ஹுஸூர் வ அலைக்கும் ஸலாம், மகனே வாருங்கள் என்று கூறினார்கள். அதற்கு நான் ஹுஸூர் இங்கு சும்மாதான் வந்தேன் என்றேன். அதற்கு அவர்கள் நாளை மறுநாள் நீ திருப்தி அடைந்து விடுவாய். உமது தந்தையார் பல மக்களது ஆதரவுடன் உள்ளார். அவர் உனக்கு பணம் அனுப்புவார் என்று கூறினார்கள். காலையில் எழுந்ததும் நான் இந்தக் கனவை எனது கருணை மிகுந்த ஆசிரியரான ஸெய்யது பஹ்வல் சா சாஹிபிடம் கூறினேன். அவர்கள் நான் கூறியதைக் கேட்டு மறுநாள் பைஅத்திற்கான கடிதத்தை எழுதி விட்டார்கள். அது இப்போதும் பாதுகாப்பாக இருக்கின்றது. இதை அவர் கூறும் அந்த சமயம் வரை அந்த கடிதம் அவரிடம் இருந்தது.

கூறுகின்றார்கள்: அடுத்த நாள் மீண்டும் கனவில் காதியானுக்கு வந்து ஹுஸூர் அவர்களிடம் சென்றேன். முன்பு கூறியதைப் போன்றே ஹுஸூர் அவர்கள் என்னிடம், வாருங்கள்! நீங்கள் வாருங்கள்! என்று கூறினார்கள். அதற்கு நான் ஹுஸூர், நான் சும்மா தான் வந்தேன் என்று கூறினேன். ஹுஸூர் என்னிடம், உங்களுக்கு ஒரு மகன் பிறப்பான். உங்களது குடும்பத்தில் இதுவரை இல்லாத ஒரு சிறப்பான மகனாக அவன் இருப்பான். அவனது ஒரு தொடையில் கருப்பு மச்சம் இருக்கும் என்று கூறினார்கள். பிறகு நான் இந்தக் கனவையும் ஹஸ்ரத் சா சாஹிபிடம் கூறினேன். முதல் கனவு கண்டு 3 நாட்கள் கழிந்ததும் நான் உடல்நலத்துடன் ஆரோக்கியமாக இருந்தேன். நோய் இருக்கவில்லை. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு தந்தையார் 30 ரூபாய் அனுப்பி இருந்தார்கள். பிறகு எனக்கு எப்படிப்பட்ட பேரன்பு ஏற்பட்டது என்றால், அந்த சமயத்தில் நான் ஹஸ்ரத் சாஹிபை எப்போது சந்திக்க முடியும் என்று காத்திருந்தேன். பெற்றோர் மறைமுகமாக என்னை எதிர்த்து வந்தனர். 1904 ஆம் ஆண்டு லாஹூர் சென்று ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்தேன். பிறகு ஹுஸூர் அவர்களுடன் ஏறக்குறைய 5 நாட்கள் வரை தங்கியிருந்தேன். ஹுஸூர் அவர்களின் தங்குமிடம் மர்ஹமே ஈஸாவின் வீட்டில் இருந்தது என்று நினைக்கின்றேன்.

கூறுகின்றார்கள்: நீள வாலை உடைய குரங்கைப் போன்று ஒரு மவ்லவி தேக்கு மரத்தில் ஏறி நின்றவாறு மிகவும் மோசமாகப் பேசிக் கொண்டிருந்தார். அவர் டாலி மவ்லவி என்ற பெயரால் பிரசித்திப் பெற்றிருந்தார்.

**ஹஸ்ரத் ஹாஃபிஸ் இப்ராஹீம் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

இவர் 1899 ஆம் ஆண்டு கடிதம் மூலம் பைஅத் செய்தார். 1900 ஆம் ஆண்டில் ஹுஸூர் (அலை) அவர்களது கைகளில் பைஅத் செய்தார்.

கூறுகின்றார்கள்: நான் 1899 ஆம் ஆண்டில் கடிதம் மூலம் பைஅத் செய்தேன். இதற்கு முன்னரும் எனது தந்தையார் மூன்று அல்லது நான்கு வருடங்களாக என்னை பைஅத் செய்வதற்காக அனுப்பி வைத்தார்கள்.

ஆனால் சில காரணங்களால் நான் திரும்பவும் வீட்டிற்கு வந்து விட்டேன். அதற்கு பிறகு நமது உற்ற நண்பரும் ஆசிரியருமான செய்யது பஹாவல் சா சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். பிறகு அவர்கள் எனக்கு ஹுஸுர் அவர்களின் நூல்களைப் படித்து காண்பித்தார்கள். அதுவரை எழுதப்பட்ட ஹுஸுர் அவர்களது நூல்களிலிருந்தும் ஏறக்குறைய அனைத்து நூல்களையுமே அவர்கள் எனக்குப் படித்துக் காண்பித்தார்கள்.

படிக்காதவர்களாக இருந்தும் கூட நூல்களைப் பிறர் படிக்கக் கேட்டுள்ளார்கள்.

கூறுகின்றார்கள்: அதே நாளில் நான் கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்துள்ளதைப் பார்த்தேன். நான் ஹுஸுர் (ஸல்) அவர்களிடம், ஹுஸுர் மிர்ஸா சாஹிப் தாமே மஸீஹ் என்றும், மஹ்தி என்றும் வாதம் புரிந்துள்ளார்களே! அந்த வாதத்தில் அவர்கள் உண்மையாளரா? என்று கேட்டேன். ஹுஸுர் (ஸல்) அவர்கள், ஆம்! அவர்கள் உண்மையாளர்! என்று கூறினார்கள். நான் ஹுஸுர், நீங்கள் சத்தியம் செய்து கூறுங்கள் என்றேன். அதற்கு எனக்கு சத்தியம் செய்ய வேண்டிய தேவையில்லை. நான் விண்ணிலும் மண்ணிலும் நம்பிக்கைக்குரியவனாக இருக்கின்றேன் என்று கூறினார்கள். பிறகு அதே இரவு கழிந்த பிறகு காலையில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கடிதம் எழுதி அதில் பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு கூறும்படி சொல்லியிருந்த அஸ்ஸலாமு அலைக்கும் என்பதையும் எழுதினேன். பிறகு 1900 ஆம் ஆண்டில் காதியான் வந்து ஹுஸுர் அவர்களின் கையில் பைஅத் செய்தேன்.

**ஹஸ்ரத் முன்ஷி பரக்கத் அலி சாஹிப் தனது ஒரு அருளுக்குரிய கனவு தொடர்பாக இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:**

இவர் பைஅத் செய்த வருடம் 1901 ஆம் ஆண்டாகும். அதே வருடம் இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் சந்தித்தார்.

கூறுகின்றார்கள்: 1901 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடந்த சமயத்தில் ஹுஸுர் அவர்கள் ஒரு பிரசுரத்தை வெளியிட்டிருந்தார்கள். அதில் எவர்கள் உள்ளத்தால் என் மீது ஈமான் கொண்டுள்ளார்களோ அவர்கள் வெளிப்படையாக பைஅத் செய்யா விட்டாலும் அவர்கள் தம்மை அஹ்மதி என்று எழுதிக் கொடுக்கலாம் என்று கூறியிருந்தார்கள். அப்போது எனக்கு எந்த அளவு நல்லெண்ணம் ஏற்பட்டிருந்தது என்றால், ஓரளவு நான் சந்தாவும் கொடுத்து வந்தேன். நான் பைஅத் செய்யவில்லை. ஆனால் மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது நான் என்னைப் பற்றி அஹ்மதி என்று எழுதிக் கொடுத்தேன்.

ஒருநாள் கனவில் நான் ஹுஸுர் அவர்களைச் சந்தித்தேன். அப்போது ஏறக்குறைய அதிகாலை நான்கு மணியாக இருந்தது. எனக்கு அருகிலுள்ள அறையில் ஹுஸுர் அவர்கள் வந்துள்ளார்கள் என்று எனக்கு தெரிய வந்தது. எனவே, நானும் ஹுஸுர் அவர்களைச் சந்திக்கும் நற்பாக்கியத்தை அடைவதற்காக அந்த அறைக்குச் சென்று அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். ஹுஸுர் வ அலைக்குமுஸ் ஸலாம் என்று பதில் கூறிவிட்டு பரக்கத் அலி நீங்கள் நம் பக்கம் எப்போது வருவீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான், ஹஸ்ரத் நான் இப்போது வந்து விடுவேன் என்று கூறினேன். ஹுஸுர் அப்போது கட்டிலில் அமர்ந்திருந்தார்கள். உடலின் மேற்பகுதியில் ஆடை இருக்கவில்லை. தலைமுடி நீளமாக இருந்தது. வயிறும் தெரிந்தது. அதற்குப் பிறகு சில நாட்கள் கழிந்ததும் நான் எழுத்துப்பூர்வமாக பைஅத் செய்து விட்டேன். இந்தக் காட்சி எனக்கு நான் விழித்திருக்கும் நிலையில் காட்டப்பட்டது போன்றே இதுவரை எனது நினைவில் இருக்கின்றது. அதற்குப் பிறகு ஆண்டு மாநாடு நடைபெற்ற சமயத்தில் நான் காதியான் தாருல் அமானுக்குச் சென்று ஹுஸுர் அவர்களின் கைகளில் பைஅத் செய்தேன். நான் கனவில் பார்த்தது போன்றே முற்றிலும் அப்படியே ஹுஸுர் (அலை) அவர்களின் அருளுக்குரிய தோற்றம் இருப்பதை அப்போது பார்த்தேன். இதற்கு சில நாட்கள் கழிந்த பிறகு நான் தற்செயலாக ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் தற்போது வசித்து வருகின்ற அந்த விருந்தினர் விடுதிக்கு நான் வந்திருந்தேன். இந்த வீடு மஸ்ஜிது அக்ஸாவிற்கு அருகில் உள்ளது.

கூறுகின்றார்கள்: நான் ஒரு கட்டிலில் அமர்ந்திருந்தேன். முன்னாலுள்ள மேல் தளத்தில் அல்லது ஓரளவு உயர்வான இடத்தில் ஹுஸுர் அவர்கள் வந்து அமர்ந்தார்கள். ஹுஸுர் குளித்து விட்டு வந்திருந்தார்கள். முடி விரிந்து கிடந்தது. உடலின் மேல் பகுதியில் ஆடை இருக்கவில்லை. குறிப்பாக நான் கனவில் கண்ட அதே வடிவமாக

அது இருந்தது. இந்தக் கனவை எனக்கு நேர்வழி காட்டுவதற்காக இறைவன் காட்டியுள்ளான் என்று மேலும் எனக்கு உறுதி ஏற்பட்டது.

**முஸ்தகீம் சாஹிப் அவர்களின் மகன் ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

இவர் பைஅத் செய்த வருடம் 1906 ஆம் ஆண்டாகும். 1906 ஆம் ஆண்டிலேயே இவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களைச் சந்தித்தார்கள்.

கூறுகின்றார்கள்: ஒருநாள் தூக்கத்தின் போது வானத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன். அந்தக் குரல் மலக்குகளுக்கு மத்தியில் நூருத்தீனுக்கு அப்துல் பாஸித் என்று பெயர் என்று கூறியது. இந்த சம்பவத்தை நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் கூறினேன். அவர்கள் சிரித்தவாறே எனக்கும் தெரியும். எனது பெயர் அப்துல் பாஸித் ஆகும் என்று கூறினார்கள்.

முஸ்தகீம் சாஹிப் அவர்களது மகனான ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் அவர்களது அறிவிப்பாகும். ஹஸரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கிலாஃபத்தின் ஆடையை அணிந்து மஸ்ஜிது முபாரக்கில் முதல் சொற்பொழிவை ஆரம்பித்த போது அந்த சமயத்தில் அவர்களது தொடையில் கட்டி இருந்ததால் அவர்கள் அமர்வதற்காக நாற்காலி கொண்டு வரப்பட்டது. அவர்கள் சொற்பொழிவை தொடங்கிய போது இந்த எளியவன் மாடிப்படிகளுக்கு எதிரில் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தேன். முழு பள்ளிவாசலும் நிரம்பியிருந்தது. அப்போது நான் தூக்கத்திலும் இல்லை. சிற்றுறக்கத்திலும் இல்லை. மாறாக, நன்றாக விழித்திருக்கும் நிலையில் நான் அமர்ந்திருந்தேன். நான் என்ன பார்த்தேன் என்றால் சூரிய ஒளியில் மாற்றம் ஏற்பட்டு வேறொரு ஒளி வந்திருந்தது. அந்த ஒளி எத்தகு துன்பத்தையும் ஆனந்தத்தையும் தன்னகத்தே கொண்டதாக இருந்தது என்றால் அதன் நிலையை எடுத்துக்கூற முடியாது. அதன் இன்பத்தையும் ஆனந்தத்தையும் என்னால் கணித்துப் பார்க்க முடியாது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே பள்ளிவாசல் அங்கிருந்து மறைந்து விட்டது. சபையும் மறைந்து விட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தோற்றம் மட்டும் ஒரு நட்சத்திரத்தின் வடிவம் பெற்ற நிலையில் கண்களுக்கு தெரிந்தது. அது அந்த ஒளிக்குள் சுற்றிக் கொண்டிருந்தது. வெகு நேரமாக இதே நிலையை நான் பார்த்துக் கொண்டேயிருந்தேன். இந்நிலையில் நான் தூங்கவுமில்லை. எனக்கு சிற்றுரக்கமும் வரவில்லை. மாறாக நான் நல்ல நிலையில் சபையில் அமர்ந்துள்ளேன். இந்த ஆன்மீக காட்சியையும் பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் பழைய நிலை திரும்பியது. பள்ளிவாசல் தெரிய ஆரம்பித்தது. மக்களும் அதே பழைய நிலைமையில் இருந்தது தெரிந்தது. அதாவது முதலில் அவர் கண்ட அதே காட்சி அவருக்கு தென்பட்டது. மக்களும் தெரிய ஆரம்பித்தனர்.

கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அக்தஸ் அவர்களுக்கு அருகில் நான் கண்ட அதே ஒளி ஒரு நட்சத்திரத்தின் வடிவில் இருந்தது. தொடர்ந்து 11 நாட்கள் வரை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை இதே நிலையில் எல்லா நேரமும் நான் பார்த்துக் கொண்டிருந்தேன். எங்கு அவர்கள் சென்றார்களோ அங்கேயே அந்த ஒளி அவர்களுக்கு வலப்புறமும் இடப்புறமும் முன்னாலும் பின்னாலும் இருந்து வந்தது. நான் எந்த நிலைமையில் இருந்தேனோ அதே நிலைமையில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை அந்த ஒளிக்குள் பார்த்தேன். நான் வீட்டில் இருந்தாலும் சரி, வெளியில் வேலை செய்து கொண்டிருந்தாலும் சரி அல்லது வெறுமனே அமர்ந்திருந்தாலும் சரி, சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் சரி, பேசிக் கொண்டிருந்தாலும் சரி இப்படிப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இந்த கஷ்ஃப் காட்சியின் நிலை என்னை ஆட்கொண்டிருந்தது. அந்த ஒளியும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் எனக்கு தென்பட்டுக் கொண்டேயிருந்தனர்.

கூறுகின்றார்கள்: இந்தக் காட்சியைத் தொடர்ந்து 11 நாட்கள் வரை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்படிப்பட்ட கஷ்ப் காட்சி பற்றி ஒருபோதும் நான் கேள்விப்பட்டதுமில்லை. இத்தகைய நீளமான ஒரு காட்சியை நான் கண்டதும் இல்லை. முழுக்க முழுக்க ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பரக்கத்தாலும் நபித்துவ ஒளியின் தாக்கத்தாலும் என்னைப் போன்ற சாதாரண மனிதரும் கூட இந்த அளவு பெரிய நீளமான கஷ்ஃப் காட்சிகளைப் பார்க்க முடிகின்றது. இந்த கஷ்ஃப் காட்சி கூட திருக்குர்ஆனின் இந்த வசனத்தின் கீழ் இருக்கின்றது. அதில் தூய நல்ல மனிதர்களுக்கு ஒரு ஒளி கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

சூரா தஹ்ரீமில் இந்த வசனம் உள்ளது. நூருஹும் யஸ்ஆ பய்ன அய்தீஹிம் வபி அய்மானிஹிம் – அவர்களின் ஒளி அவர்களுக்கு முன்னாலும், அவர்களின் வலப்பக்கங்களிலும் விரைவாகச் செல்லும்.

இன்னொரு வசனத்தில், எவருக்கு இந்த உலகில் இந்த ஒளி கிடைக்கவில்லையோ அவருக்கு மறுமையில் அவ்வொளி எப்படி கிடைக்க முடியும்? என்று வந்துள்ளது.

ஆக, இறைவன் என்னிடம் உனது கலீஃபா கியாமத் நாளில் ஒளி கிடைக்கின்ற அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களைச் சார்ந்தவராவார். இந்த உலகிலும் இந்த நபர் தமது இறைவனின் ஒளியிலேயே இருக்கின்றார் என்று இதன் மூலம் கூறுகிறான்.

**ஹஸ்ரத் காஸி முஹம்மது யூசுஃப் சாஹிப் கூறுகின்றார்கள்:**

இவர் 1902 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடிதம் மூலமாக பைஅத் செய்தார். 1902 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஹுஸூர் (அலை) அவர்களது கைகளில் பைஅத் செய்தார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: என்னைப் பாதுகாப்பதற்காக அல்லாஹ் இரண்டு மலக்குகளை நியமித்திருக்கின்றான் என்று எனக்கு காட்டப்பட்டது. அவர்களில் ஒருவருக்கு முஹம்மது ஸித்தீக் என்று பெயர். அவர் எனது தந்தையாரின் வடிவத்தில் இருக்கின்றார். இரண்டாவது மலக்கின் பெயர் குலாம் ஸமதானி ஆகும். துன்பங்கள் மற்றும் துயரங்கள் ஏற்படும் சமயங்களில் மீண்டும் இந்த மலக்குகள் நமக்கு முன்னால் தென்படுகின்றார்கள். மேலும் தந்தையார் குறைந்தது இரண்டு முறையாவது அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று ஓதுங்கள் என்று கூறி வந்தார்கள். நான் இதை தொழுகையில் பேணி வந்தேன். அதாவது அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று இருமுறை ஓதினேன்.

உண்மையான புகழுக்குத் தகுதியானவன் அல்லாஹ்வேயாவான். இந்தப் புகழ் தான் நம்மை அல்லாஹ்வுக்கு அருகில் கொண்டு செல்கின்றது. மேலும் அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்கவும் துன்பங்களை அகற்றவும் அதிகமாக சூரா ஃபாத்திஹாவை ஓத வேண்டும். அதிலுள்ள ஒவ்வொரு சொல்லையும் சிந்திக்க வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**நூர் முஹம்மது சாஹிபின் மகன் ஹஸ்ரத் முஹம்மது ஃபாஸில் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

இவர்கள் 1899 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 1900 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பைஅத் செய்திருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: முதலில் சம்பிரதாய முறைப்படி தொழுகையில் நான் தொப்புளுக்கு கீழே கைகட்டி நின்று வந்தேன். பொதுவாக ஜமாஅத்தைச் சாராத மக்கள் தொழுகின்ற போது கீழே கைகட்டுகின்றனர். மேலும் எப்போதாவது எவர் பின்னாலாவது ஜமாஅத்தாக தொழுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தால் நான் இமாமைப் பின்பற்றி சூரா ஃபாத்திஹாவை ஓதி வந்தேன். ஆனால், உள்ளம் நிம்மதியிழந்து இருந்தது. தொப்புளுக்கு கீழ் தான் கைகட்ட வேண்டுமா? இமாமைப் பின்பற்றி சூரா ஃபாத்திஹா ஓத வேண்டுமா? என்ற சந்தேகம் உள்ளத்தில் இருந்து வந்தது. இமாமுக்குப் பின்னால் சூரா ஃபாத்திஹா ஓத வேண்டுமா? ஓதக்கூடாதா? நெஞ்சில் கைகட்ட வேண்டுமா? கீழே கைகட்ட வேண்டுமா? போன்ற விசயங்களில் எனக்கு திருப்தி ஏற்படாமல் இருந்தது.

கூறுகின்றார்கள்: இதே அமைதியற்ற நிலைமையில் ஒருநாள் நான் தூங்கி விட்டேன். அப்போது கனவில் நான் காதியான் வந்திருந்தேன். மஸ்ஜிது முபாரக்கிற்குச் செல்லும் தெரு வழியாக நடக்கின்றேன். மஸ்ஜிது அக்ஸாவின் கதவருகில் சென்றேன். முதலில் நேராக இருந்த மாடிப்படிகளைக் கடந்து உள்ளே நுழைகின்றேன். பள்ளிவாசலுக்கு வெளியே காலணிகள் வைக்கும் இடத்தில் கருவேல மரம் இருந்தது. இது ஒருவகை செடியாகும். அதற்கு அருகிலோ அல்லது அடியிலோ கட்டப்பட்ட கல்லறை ஒன்று இருந்தது. அதற்கு கிழக்கில் ஒரு கிணறு இருக்கின்றது. பள்ளிவாசலில் ஜமாஅத்தான தொழுகையில் நிற்கின்ற அனைவரும் நெஞ்சில் கைகட்டியவாறு நிற்கின்றனர். முஸல்லாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இமாமாக நிற்கின்றார்கள். இமாமுக்கு நேர் பின்னால் அவரைப் பின்பற்றி தொழுகின்ற ஒருவரது இடம் காலியாக இருந்தது. நான் அந்த இடத்தில் சென்று நின்றேன். நெஞ்சில் கைகட்டியவாறு சூரா ஃபாத்திஹா ஓத ஆரம்பித்தேன். அதை ஓதி முடித்து ஆமீன் என்று கூறும் போது நான் விழித்தெழுந்தேன். இவ்வாறு கையை நடுவில் கட்ட வேண்டும். சூரா ஃபாத்திஹாவும் ஓத வேண்டும் என்ற தீர்வுக்கு வந்து, எனது பிரச்சனை தீர்ந்தது.

**முஸ்தகீம் சாஹிப் அவர்களின் மகனான ஹஸ்ரத் கைருத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை இந்த எளியவன் கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல மக்களையும் விருந்திற்கு அழைத்திருப்பதைப் பார்த்தேன். அந்த விருந்திற்கான ஏற்பாட்டை ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் அதை கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். நான் தூதுச் செய்தியைச் சொல்வதற்காக ஆஜரான போது ஜனாப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவருக்கு சாப்பிட சோறு கொடுங்கள் என்று கூறினார்கள். எனக்கு சோறு கொடுக்கப்பட்டது. இன்னொரு விசயமும் உள்ளது. அது இந்த விருந்து சம்பந்தப்பட்ட கனவில் வந்த விசயமா? அல்லது வேறு தனி கனவா? என்பது எனக்கு நன்றாக நினைவில் இல்லை. ஆனால், கூறப்பட்ட விசயம் நன்றாக நினைவில் இருக்கின்றது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவருக்கு மேலங்கியை அணிவியுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் இந்த விசயத்தைக் கூறியவுடன் நான் உடனடியாக எனது உடலைப் பார்த்த போது மிகவும் அழகாக வெண்ணிற மேலங்கியை நான் அணிந்திருப்பதைப் பார்த்தேன். நான் அதை எப்படி அணிந்தேன்? எந்த சமயத்தில் அணிந்தேன்? என்று எனக்கு தெரியாது. திடீரென்று எனது உடலில் அதை அணிந்திருப்பதை நான் பார்த்தேன். இன்றுவரை என் உடலில் அதன் தாக்கத்தை நான் உணர்கின்றேன். இவ்வாறே கனவில் நான் ஒரு நபரைப் பார்த்தேன். அந்த நபர் கண்ணியத்திற்குரிய சஹாபாக்களைச் சார்ந்தவராக இருந்தார்.

கனவு கண்ட பிறகு இந்தக் கனவு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது, 'என்னைப் பெற்றுக் கொண்டவர் சஹாபாக்களைச் சந்தித்து விட்டார். அந்த அமிர்தத்தைத் தான் எஜமானன் என்னை குடிக்கும்படி செய்தான்' என்ற கவிதை வரிகளை எனக்கு ஞாபகப்படுத்தியது. என்னைச் சந்தித்த அந்த நபர், அவர் தன் மீது ஒரு பெரிய துணியைப் போட்டுள்ளார். அதன் ஓரங்கள் சிவப்பு நிறத்தில் இருந்தன. 'இந்த துணியை நீங்கள் எங்கிருந்து வாங்கினீர்கள்' என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், 'இதனை முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்கு தந்துள்ளார்கள்' என்று கூறினார். இதைக் கேட்ட நான், 'ஏறக்குறைய 1400 வருடங்களுக்கு முன்னரே முஹம்மது (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்களே?' என்று கூறினேன். அதற்கு அந்த நபர், 'எவ்வாறிருப்பினும் எனக்கு இதனை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தான் தந்தார்கள் அல்லது இதை நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்தே பெற்றேன்' என்று கூறினார். இந்த வாக்கியம் மட்டும் முரண்பட்டிருந்தாலும் இது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. அப்போது நான், 'முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது வீடுகளை யார் பாதுகாக்கின்றார்கள்? என்பதை கூறுங்கள்' என்றேன். அதற்கு அவர், 'முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீடுகளைப் பள்ளிவாசலைச் சார்ந்துள்ள இளைஞர்கள் பாதுகாக்கின்றனர்' என்று கூறினார். நான் அவரிடம், 'முஹம்மது ரஸூலுல்லாஹ்வின் மனைவிமார்களின் நிலைமை எப்படி இருக்கின்றது?' என்று கேட்டேன். அதற்கு அந்த நபர், 'மனைவிமார்களின் நிலைமை பற்றி என்ன கேட்கின்றீர்கள்? அவர்களில் சிலர் தில்லி வந்து சேர்ந்துள்ளனர்' என்று கூறினார். அந்த சமயத்தில் ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா அவர்கள் தில்லியைச் சேர்ந்தவர்கள் என்பது எனக்கு தெரியாது.

கூறுகின்றார்கள்: அல்லாஹ் பௌதீக நிலையிலும், ஆன்மீக நிலையிலும் இந்த திருக்குர்ஆனுக்கு முற்றிலும் பொருந்தும் ஒரு இயக்கமாகும் என்று என்னை திருப்தி அடையச் செய்தான். இதுவே வஆகரீன மின்ஹும் என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

**கைருத்தீன் சாஹிபின் இன்னொரு அறிவிப்பு இருக்கின்றது. அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருநாள் நான் கனவில் மஸ்ஜிது அக்ஸாவைப் பார்த்தேன். எவ்வாறு நான் அதைப் பார்த்தேன் என்றால், அதற்கு பக்கத்திலேயே பைத்துல்லாஹ்வும் இருக்கின்றது. இரண்டின் தோற்றமும் ஒன்றுபோல் இருக்கின்றது. காதியானிலுள்ள மஸ்ஜிது அக்ஸா எது? பைத்துல்லாஹ் எது? என்பதை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. இந்த இரண்டின் தோற்றமும் எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டது. இதை மஸ்ஜிது அக்ஸா என்று கூறுவேனா? அதை மஸ்ஜிது அக்ஸா என்று கூறுவேனா? என்று நான் கூறிக் கொண்டிருந்தேன். இரண்டுமே எனக்கு சந்தேகத்திற்குரியதாக ஆகிவிட்ட நிலையில் என் கண்கள் திறந்தன.

அப்போது வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் என்பதற்குப் பொருந்துகின்ற அந்த இயக்கம்தான் இது என்பது எனது உள்ளத்தில் போடப்பட்டது.

**ஹகீம் அதா முஹம்மது சாஹிப் கூறுகின்றார்கள்:**

இவர்கள் 1901 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்கள். அதே ஆண்டில் ஹுஸூர் (அலை) அவர்களையும் சந்தித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பைஅத் செய்த பிறகு சில நாட்கள் வரை காதியானில் தங்கியிருந்தேன். பிறகு ஹுஸூரிடம் அனுமதி பெற்று லாஹூர் திரும்பி வந்தேன். அப்போது துணி நெய்பவரான சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்கள், அஹ்மதிய்யா ஜமாஅத் சகோதரர்களை என்னைச் சந்திக்கும்படி செய்தார். சிறிது காலத்திற்குப் பிறகு ஒரு நபர் அன்புடன் மீண்டும் முஹம்மது சாஹிப் காதியானுக்கு வந்து விட்டார்கள் என்று கூறினார். இதை ஒரு அஹ்மதி கூறினார்.

கூறுகின்றார்கள்: இந்த விசயத்தைக் கேட்டு எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. (அவர் புதிதாக பைஅத் செய்திருந்தார்.)

கூறுகின்றார்கள்: அப்போது நான் துஆ செய்தேன். இறைவா! முஹம்மது (ஸல்) அவர்கள் மீண்டும் வந்து விட்டார்கள் என்பது இந்த ஜமாஅத்தின் கொள்கையாகும். மிர்ஸா சாஹிப் எப்படி முஹம்மதாக முடியும்? என்று கேட்டேன். நான் கனவில் பார்த்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிற்கின்றார்கள். அப்போது வானத்திலிருந்து ஒரு மலக்கு இறங்கி இவர்கள் யார்? என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான், இவர் மிர்ஸா சாஹிப் என்று கூறினேன். பிறகு நான் பார்த்தேன். விண்ணிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களது ஒளி இறங்கியது. அந்த ஒளி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மூளையில் நுழைந்தது. பிறகு அந்த ஒளி அன்னாரது முழு உடலிலும் புகுந்தது. ஹுஸூர் அவர்களது முகம் அந்த ஒளியால் நிரம்பியதாக ஆனது. அப்போது அந்த வானவர் இவர் யார்? என்று கேட்டார். அதற்கு நான், முதலில் இவர் மிர்ஸா சாஹிபாக இருந்தார். இப்போது உண்மையிலேயே முஹம்மது ஆகிவிட்டார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்று கூறினேன்.

இதுவே ஓர் ஆட்சேபனையாக கூறப்படுகிறது. உண்மையில் இந்த முஹம்மதிய ஒளியைப் பரப்புவதற்காகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் சேக் முஹம்மது அப்ஸல் சாஹிப் கூறுகின்றார்கள்:**

இவர் 1905 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். கூறுகின்றார்கள்: இந்த எளியவனுக்கு 12 வயது ஆன சமயத்தில் எனது குடும்பத்தில் எனது பெரியப்பா ஹகீம் சேக் இபாதுல்லாஹ் சாஹிப் அவர்களும், எனது பெரியப்பாவின் மகன் சேக் கரம் இலாஹி சாஹிப் ஆகியோரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தனர். ஆனால் இந்தத் தொண்டன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்ததுமில்லை. ஹுஸூர் அவர்களது புகைப்படைத்தையும் பார்த்ததில்லை. கனவில் எனது உடலிலிருந்த எல்லா சக்தியும் வெளியேறி விட்டதைப் பார்த்தேன். ஆனால் மூளையில் புரிவதற்கும், கண்களில் பார்ப்பதற்கும் உரிய ஆற்றல்கள் மட்டும் எஞ்சியிருந்தன. எனக்கு முன்னால் ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். அவருக்குப் பின்னால் இன்னொருவரது கால் அவரது முழங்கால் வரை தெரிந்தது. உட்கார்ந்து கொண்டு உன் பக்கம் பார்ப்பவர் மிர்ஸா சாஹிப் ஆவார்கள். பின்னால் இன்னொரு நபரது கால்கள் தெரிகின்றது. அந்த நபர் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்று எனது உள்ளத்தில் போடப்பட்டது. பிறகு எனது கண்கள் திறந்தன. காலையில் நான் இப்போது லாஹூரி ஜமாஅத்தில் இருக்கின்ற அப்துல்லாஹ் கான் சாஹிபின் மகன் முர்தஸா கானிடம் இந்தக் கனவைப் பற்றி கூறி, இதன் விளக்கத்தைக் கேட்டேன். அதற்கு அவர், உங்களுக்கு மிர்ஸா சாஹிப் மூலமாக ரஸூலே கரீம் (ஸல்) அவர்களைப் பின்பற்றும் நல்வாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார். அவ்வாறே நடந்தது. நான் இறைவன் மீது ஆணையிட்டு இதை எழுதுகின்றேன். 1905 ஆம் ஆண்டில் நான் பைஅத் செய்த போது கனவில் என் பக்கம் பார்த்த அதே ஹுஸூரை நான் பார்த்தேன். இறைவன் யாருக்கு விரும்புகின்றானோ அவருக்கு உண்மையான வழியைக் காட்டி விடுகின்றான்.

**ஹஸ்ரத் சேக் முஹம்மது அப்ஸல் சாஹிப் கூறுகின்றார்கள்:**

எனது வயது 15 ஐ அடைந்த போது, நான் சுவர்க்கத்தையும், நரகத்தையும், உயர்ந்த இடங்களையும் கனவில் பார்த்தேன். அவற்றைப் பார்த்ததன் விபரங்கள் மிக நீளமானதாகும். இப்போது இதை மட்டும் கூறுகின்றேன். நான் சுவர்க்கத்தைப் பார்த்து விட்டு வெளியே வந்த போது, ஒரு பெரியவர் என்னைச் சந்தித்தார். அவர் எனது தோளின் மீது தனது அருளுக்குரிய கையை வைத்தவாறு பையனே நீ எங்கு வந்தாய்? என்று கேட்டார். நான் அதற்கு எந்தப் பதிலும் கூறவில்லை. நான் அவரிடம் இந்த இடம் அதாவது சுவர்க்கம் யாருக்குச் சொந்தமானது? என்று கேட்டேன். அதற்கு அந்தப் பெரியவர் உனது பட்டியாலா நூறு முறை விற்கப்பட்டாலும் கூட இந்த வீட்டிலுள்ள ஒரு செல்களுக்குரிய விலைக்கு ஒப்பானதாக அது இருக்க முடியாது என்று கூறினார். பிறகு எனது கண்கள் திறந்தன. எவனுடைய கையில் எனது உயிர் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் 1905 ஆம் ஆண்டில் பைஅத் செய்வதற்காக காதியான் சென்ற போது என்னை சுவர்க்கத்தின் வாசலில் வைத்து சந்தித்த அதே பெரியவர்தான் மிர்ஸா சாஹிபாக இருந்தார்கள்.

**நூர் முஹம்மது சாஹிபின் மகன் ஹஸ்ரத் முஹம்மது பாஸில் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவர்கள் 1899 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்கள். கூறுகின்றார்கள்: இவரது ஒரு அறிவிப்பு முன்னதாக கூறப்பட்டு விட்டது. ஒருநாள் நாங்கள் இருக்கும் இடத்திலிருந்து 8 மைல் தொலைவிலிருக்கும் மான்கோட் என்ற இடத்திற்குச் சென்றேன். இரவில் அங்கு தொழுது விட்டு தூங்கினேன். கனவில் நான் என்ன பார்த்தேன் என்றால், நான் முஸல்லாவில் அமர்ந்துள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முஸல்லாவின் தலைப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டார்கள். எனது வலது உள்ளங்கையை தனது பெருவிரலால் வலுவாகத் தேய்த்தார்கள். மேலும் உள்ளத்ததில் கொஞ்சம் சக்தி உருவாகியுள்ளதா? என்று கேட்டார்கள். அப்போது நான் என்னுள் சக்தி உருவாகுவதை உணர்கின்றேன். ஹுஸூரிடம், ஆம்! என்னுள்ளத்தில் சக்தி உருவாகியுள்ளது என்று கூறுகின்றேன். பிறகு எனது கண்கள் திறந்தன.

முஹம்மது ஃபாஸில் சாஹிப் அவர்களே கூறுகின்றார்கள்: நான் கனவில் காதியான் வந்திருப்பதைப் பார்த்தேன். மஸ்ஜிது முபாரக்கிற்கு உள்ளே மிஹ்ராப் அருகில் மூலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். பள்ளிவாசலில் பெரும் பிரகாசம் இருந்தது. நான் ஹுஸூருக்கு முன்னால் சென்று அமர்ந்தேன். ஹுஸூர் எனக்கு மிகுந்த வெண்ணிறமுள்ள சீனா தட்டில் மிகுதியாக சிவப்பு நிறத்திலுள்ள சுவையான அல்வாவை வைத்து தனது கைகளால் அதை எனக்கு தந்து இதை சாப்பிடுங்கள் என்று கூறினார்கள். நான் அப்போதே அதை சாப்பிட்டேன். அது மிகுந்த சுவையுள்ளதாக இருந்தது. பிறகு எனது கண்கள் திறந்தன.

**ஹஸ்ரத் ஹாஃபிஸ் ஜமால் அஹ்மது சாஹிப் கூறுகின்றார்கள்:**

இவர்கள் 1908 ஆம் ஆண்டு மே மாதம் ஹுஸூர் (அலை) அவர்களைச் சந்தித்தார்கள். கூறுகின்றார்கள்: எனது மனைவி என்னிடம் கூறினார்கள். ஒருநாள் எனது மனதில் ஒரு சந்தேகம் உருவாகியது. பீர்கள் பலரும் உள்ளனர். அப்படி இருக்கும் போது நாம் மிர்ஸா சாஹிப் அவர்களை உண்மையாளர் என்றும் மற்றவர்களை பொய்யர் என்றும் ஏன் கூறுகின்றோம்? உண்மையான பீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான். மற்றவர்கள் அனைவரும் தவறானவர்கள் என்று ஏன் கூறுகின்றோம்? என்று நினைத்தேன். இரவில் நான் கனவில் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் கையைப் பற்றியவாறு இவரை ஏற்றுக் கொள்ளாதவர் காஃபிர் ஆவார் என்று கூறுவதைப் பார்த்தேன். எனது மனைவியின் குடும்பத்தினர் முதலில் செய்யது அஹ்மது ரிஸாவின் முரீதுகளாக இருந்தனர். பிறகு அவருக்கு இவ்விசயத்தில் திருப்தி ஏற்பட்டது.

**ஹஸ்ரத் மியான் முஹம்மது ஸஹீருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் 1905 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். எழுதுகின்றார்கள்:**

எனது மாமனார் காஸி ஜெய்னுல் ஆபிதீன் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்வதற்கு முன்னதாக ஹஸ்ரத் முன்ஷி அஹ்மது ஜான் சாஹிப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் முன்ஷி அஹ்மது ஜான் சாஹிப் லூதியானவில் அவர்கள் வஃபாத் ஆன பிறகு கண்ணியத்திற்குரிய காஸி ஜெய்னுல் ஆபிதீன் சாஹிப் அவர்கள் பலமுறை ஹஸ்ரத் முஜத்தித் அல்பே ஸானி (ரஹ்) அவர்களின் கபருக்குச் சென்று கல்லறைகளில் இருப்பவர்களை கஷ்ஃபில் சந்திக்கும்

வழிமுறைக்கேற்ப தியானத்தில் ஈடுபட்டார்கள். ஒருநாள் ஹஸ்ரத் முஜத்தித் அல்பே ஸானி அவர்களைச் சந்தித்தார்கள். அவர்கள் என்னிடம் நீங்கள் என்ன விரும்புகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு காஸி சாஹிப் இறைவனை நினைவு கூற வேண்டும். எனது முர்ஷித் இறந்து விட்டார் என்றார்கள். இந்த சொற்களைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் முஜத்தித் அல்பே ஸானி அவர்களின் தோற்றம் மறைந்து விட்டது. பிறகு காஸி சாஹிப் அங்கிருந்து திரும்ப வந்து விட்டார்கள். பிறகு இரண்டு அல்லது மூன்று நாட்கள் அங்கு சென்று கபர்களில் அமர்ந்தவாறு தியானம் செய்தார்கள். துஆ செய்தார்கள். முன்னர் வந்தது போன்றே ஹஸ்ரத் முஜத்தித் அல்பே ஸானி அவர்களின் வடிவம் முன்னால் வந்தது. நீங்கள் என்ன விரும்புகின்றீர்கள்? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு காஸி சாஹிப் அல்லாஹ்வுடன் எனக்கு தொடர்பு ஏற்பட வேண்டும் என்று கூறியதுடன் சேர்த்து நான் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியிடம் செல்லவா? என்றும் கேட்டார்கள். ஹஸ்ரத் முஜத்தித் சாஹிப் அவர்கள் அங்கு உனக்கு திருப்தி ஏற்படாது என்று கூறினார்கள். இவ்வாறு கூறியதும் அவர்களது உருவம் மீண்டும் மறைந்து விட்டது. பிறகு சிறிது நாட்கள் கழிந்த பிறகு காஸி சாஹிப் காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தங்கியிருந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது எந்த இன்பம் ஹஸ்ரத் முன்ஷி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களது சபைகளில் எங்களுக்கு கிடைத்ததோ அது காதியானில் கிடைக்கவில்லை. ஹஸ்ரத் முஜத்தித் அல்பே ஸானி அவர்கள் கூறியது போன்று எங்களுக்கு திருப்தி கிடைக்கவில்லை. பலமுறை காதியான் சென்று பல வாரங்கள் தங்கி விட்டு வந்தேன். ஹஸ்ரத் முன்ஷி அஹ்மது சாஹிப் அவர்கள் எத்தகு உயர் தகுதியுள்ள சான்றோராகத் திகழ்ந்தார்கள் என்றால் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஆரம்பகால நிலைமைகளைப் பார்த்த பிறகு மக்களிடம் பைஅத் வாங்குவதை விட்டு விட்டார்கள். யாராவது அவர்களிடம் வந்தால் எவருக்கு இறைவனுடன் தொடர்பு ஏற்பட வேண்டும் என்ற ஆசை இருக்கின்றதோ அவர் காதியானிலுள்ள மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானியிடம் செல்ல வேண்டும் என்று கூறி வந்தார்கள். 1888 ஆம் ஆண்டு இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இந்த சான்றோரிடம் தான் ஹஜ் சமயத்தில் துஆ செய்யும்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியிருந்தார்கள். முன்ஷி அஹ்மது ஜான் சாஹிப் அவர்கள் எவரும் இல்லாத போது நாம் இருந்தோம். இறைவனின் படைப்பினங்களுக்கு நாம் ஒவ்வொரு துணியை வழங்கி வந்தோம். ஆனால் இந்த நபர் அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எத்தகு உயர்ந்த தைரியசாலியாகப் பிறந்துள்ளார் என்றால், இவர் நீரூற்றிலிருந்து கல்லையே அகற்றி விட்டார்கள். இப்போது யார் விரும்பினாலும் வயிறு நிறைய நீர் அருந்தலாம் என்று கூறினார்கள். அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மகிமையை எடுத்துக்கூறும் விதமாக நோயாளிகளாக இருக்கும் எங்களுக்கு உங்கள் மீதே பார்வை இருக்கின்றது. நீங்கள் இறைவனுக்காக மஸீஹாக ஆகி விடுங்கள் என்ற கவிதையையும் கூறுவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லூதியானா வருவதற்கு முன்பே அவர்கள் தமது முரீதுகளிடம் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் லூதியானா வர உள்ளார்கள். நாமும் அவர்களைச் சந்திக்க இரயில் நிலையத்திற்கு செல்வேன். நான் யார் பக்கம் சைகை மூலமாக சுட்டிக்காட்டுவேனோ அவரே மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தார்கள. முரீதுகள் அவர்களிடம் நீங்கள் அவர்களை பார்க்காத போது இவர் தான் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் என்று எப்படி அவர்களைப் பற்றி கூற முடியும்? என்று கேட்டனர். அதற்கு அவர்கள் ஹதீஸ்களில் ஏற்கனவே அவர்களது அங்க அடையாளங்கள் கூறப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லூதியான இரயில் நிலையத்தில் வந்து இறங்கியதும் பல மக்களுக்கும் மத்தியில் அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் தமது முரீதுகளிடம் சைகை மூலம் சுட்டிக் காட்டியவாறு இந்த நபர் தான் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் என்று கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்கு அருகில் வந்த போது அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறி அவர்களிடம் முஸாபா செய்தார்கள். முன்ஷி அஹ்மது ஜான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது வைத்திருந்த அந்த பற்றைப் பார்த்து நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தேன் என்று காஸி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு ஹுஸுர் (அலை) அவர்களது சபைகளின் நிறம் என் மீது படிந்த பிறகு இதற்கு முன் நான் இருந்து வந்த சபைகள் எனக்கு கசப்பானவையாகத் தெரிந்தது.

அல்லாஹ் இந்த சான்றோர்களைப்போன்றே நம்மை நமது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முன்னேறும்படி செய்வானாக! நம்மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் படிந்து விட வேண்டும் என்று விரும்பிய அந்த நிறம் படியும்படி அவன் செய்வானாக! பைஅத் செய்வது மட்டும் போதாது. மாறாக நம்மில் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ்வுடன் ஒரு தொடர்பு உருவாக வேண்டும்.

இரண்டாவது விசயம் என்னவென்றால், பாகிஸ்தானுக்காக துஆ செய்யும்படி நான் கூறி வருகிறேன். ஜமாஅத் சகோதரர்கள் துஆ செய்தும் வருகின்றார்கள் என்றாலும் இன்று மீண்டும் இதன் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். அஹ்மதிகளின் மிகவும் இக்கட்டான நிலைமைகளை உருவாக்குவதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. அரசாங்கத்தில் உள்ளவர்களிடம் இதுபற்றி கூறி புகார்கள் கொடுக்கும் போதும், உயர் அதிகாரிகளிடம் சென்று இதைப் பற்றி கேட்கும் போதும், எங்களுக்கு கிடைத்த அறிக்கைக்கேற்ப எதுவுமே நடக்கவில்லை. எல்லாமே சரியாகத்தான் நடக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றார்கள். இந்தப் பிடிவாதப் போக்கு மற்றும் இந்த அவல நிலையைப் பார்த்து இன்னாலில்லாஹி என்று கூறுவதைத் தவிர வேறு என்ன கூற முடியும்? நிச்சயமாக அல்லாஹ் தான் நாம் கவனம் செலுத்த வேண்டிய இடமாக இருக்கின்றான். அவ்வாறு இருக்கவும் வேண்டும். இந்த மக்களுக்கு இறைவனின் வல்லமையைப் பற்றிய கணிப்பு கூட இல்லை. உலக அளவில் இவர்களும் ஒரு ஜமாஅத்தாக உள்ளனர் என்று இவர்கள் நினைக்கின்றார்கள். இவர்களுடன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். எதுவும் நடக்காது என்று கருதுகின்றனர். எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் முன்பு குனிவது தான் நமது பணியாகும். இதுவே நமது கடமையாகும். இதன் பக்கம் அதிகமதிகம் கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பாக நம்மிடம் ஒருபோதும் எவ்விதத்திலும் கவனக்குறைவோ குறைபாடோ இருக்கக் கூடாது.

கடந்த சில நாட்களுக்கு முன் லாஹூரில் மார்டன் டவுணில் உள்ள அஹ்மதிய்யா கபருஸ்தானில் இரவில் வலுக்கட்டாயமாக 14 அல்லது 15 பேர் அத்துமீறி உள்ளே நுழைந்தனர். அங்கு காவலில் இருந்தவரையும் அவரது குடும்பத்தாரையும் துப்பாக்கி முனையல் மிரட்டியவாறு அவர்களைக் கயிற்றால் கட்டி வைத்தார்கள். வீட்டினுள் வைத்து அவர்களை அடைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு அங்கிருந்த 120 கபர்களை அவமரியாதை செய்யும் வகையில் நடந்து கொண்டதுடன் அதிலுள்ள கற்பலகைகளையும் உடைத்தனர். இப்போது இந்த சய்த்தான்களின் தீங்கிலிருந்து மரணித்தவர்களும் பாதுகாப்பாக இல்லை. வஃபாத் ஆகியுள்ள அஹ்மதிகள் கூட பாதுகாப்பாக இல்லை.

வெளிப்படையாக உள்ள சாட்சிகளைப் பார்க்கும் போது இதில் போலீஸின் கையும் உள்ளது என்று தெரிகிறது. போலீஸின் உதவி இவர்களுக்கு கிடைத்திருக்கின்றது. மிகவும் சிரமப்பட்டு மிகவும் மறுத்து அவர்கள் கூறிய பிறகு தான் F.I.R. பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறே சஹாதத்துகளின் தொடரும் நீடிக்கின்றது. இன்றும் கூட கொய்ட்டாவில் மக்ஸூது அஹ்மது சாஹிப் என்ற ஓர் அஹ்மதி இளைஞரை சஹீதாக்கியுள்ளார்கள். கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் எனக்கு இதுபற்றிய தகவல் கிடைத்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். சஹீது மர்ஹூம் பற்றிய விபரங்கள் வரும்போது இன்சா அல்லாஹ் அடுத்த ஜுமுஆவில் இவருக்காக நான் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். இவரது மூத்த சகோதரரையும் ஒரு மாதத்திற்கு முன்னால் கொய்ட்டாவில் வைத்து சஹீதாக்கி விட்டார்கள். அல்லாஹ் விரைவாக இந்த எதிரிகளை அவர்களது தீய முடிவின் பக்கம் கொண்டு செல்வானாக! எவ்வாறிருப்பினும், எதிரிகளின் ஒவ்வொரு கடினமான கொடுமையான செயல்களுக்கு எதிரில் முன்பை விட அதிகமாக இறைவன் பக்கம் குனிவதும் அவனிடம் உதவி கேட்பதுமே நமது பணியாகும். இதன் பக்கம் ஜமாஅத் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at Alsterdorfer Sporthalle, Hamburg, Germany.

on **07.12.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456